# தேவனுக்கு எதிரான கூட்டாட்சி

**P V. Jesudas**

கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே இருந்தபோது, அவரைக் கொல்லவேண்டும், சிலுவையிலே அறைய வேண்டும் என்று சொல்லி அநேகர் ஒன்றாக சேர்ந்தார்கள். அவர் கலிலேயன் என்று அறிந்தபோது, அவர்கள் அவரை ஏரோது ராஜா வினிடத்தில் அனுப்பினார்கள். ஏரோது ராஜா, இவரை பற்றி அதிகமாக கேள்விப்பட்டு, பற்பல அடையாளங்களை செய்யவேண்டும் என்று கேட்டபோது, இயேசு கிறிஸ்து மவுனமாயிருந்தார். அதனால் ஏரோது அவரை மறுபடியும் பிலாத்துவினிடத்தில் அனுப்பிவிட்டான்.

அன்று விரோதமாக இருந்த ஏரோதும் பிலாத்துவும் சிநேகி தரானார்கள். சதுசேயர்களும் பரிசேயர்களும் ஒருவரோடு ஒருவர் எப்போதும் சண்டைபோட்டு கொண்டிருப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவினுடைய காரியத்திலே அவர்கள் ஒன்றாக சேர்ந்து, அவரை சிலுவையில் அறையவேண்டும் என்று பிலாத்து வினிடத்தில் கேட்டுக்கொண்டார்கள்.

ஆண்டவருக்கு விரோதமாக ஒரு கூட்டு சேர்ந்தது. அவர் இந்த உலகத்தில் பாவிகளை இரட்சிக்கவந்ததால் அவர் இரட்சகராக இருக்கக்கூடாது என்றும் அவரை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் அவருக்கு விரோதமாக, அவரை சிலுவையில் அறைந்தார்கள் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.



அதேவிதமாக இந்த உலகத்தின் கடைசி நாட்களிலும் ஒரு கூட்டு ஒன்று இருக்கும். அது ஆண்டவருக்கு விரோதமான ஒரு கூட்டாட்சியாக இருக்கும்.

## இந்த கூட்டாட்சியிலே யார் இருக்கபோகிறார்கள்? அவர்கள் என்ன செய்ய போகிறார்கள்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே இருந்தபோது கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தை பற்றி அநேக தீர்க்கதரிசனங்களை சொன்னார். இந்த உலகம் எந்தவிதமாக போகும்? திருச்சபையானது எவ்விதமாக இருக்கும்? என்பதை குறித்து அவர் சொன்னார்.

**"நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், நீங்கள் ஜெபஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்; என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள்." - மாற்கு 13:9.**

இந்த உலகத்தின் கடைசி நாட்களிலே, திருச்சபைக்கு வரபோகிற பலவிதமான உபத்திரவங்களைக் குறித்து ஆண்டவர் பேசினார்.

**"அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளைகளையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்." -மாற்கு 13:12,13.**

ஆண்டவர் தன்னுடைய காலத்திற்கு பிறகு, திருசபையிலே உபத்திரவத்தின் காலம் வரும் என்று சொன்னார். சரித்திரம் படித்தவர்களுக்கு ஆண்டவர் சொன்ன காரியங்கள் எவ்வளவு உண்மையானதாய் நடந்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வார்கள்.

அவர் காலத்திலேயே, ரோம ஆட்சியை வீழ்த்தவேண்டும், சுய ஆட்சியைக் கொண்டுவரவேண்டும் என்ற ஒரு எண்ணம் யூதர்கள் மத்தியிலே இருந்தது. யூதர்களில் அநேக தலைவர்கள் எழும்பி, அந்த ரோம ராஜியத்திற்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள். அடிக்கடி படைகளாக நின்று யுத்தம் செய்தார்கள். ஆகவே ரோமர்களுக்கு இந்த யூதர்களைக் கண்டால் கொஞ்சம்கூட பிடிக்காமல்போய்விட்டது.

அந்த ரோம அரசாங்கம், யூதர்களுக்கு எவ்வளவோ நண்மை செய்து, நிறைய சலுகைகளையும் செய்தது.

ஆனாலும் இந்த யூதர்கள், எங்களுக்கு விடுதலை வேண்டும் என்று போராடினதாலே, அநேகவிதமான உபத்திரவங்களை சந்திக்க வேண்டியதிருந்தது. ரோம அரசர்கள் யூதர்களுக்கு விரோதமாக இருந்து அநேக துன்பங்களையும் துயரங்களையும் கொடுத்தார்கள்.

அக்காலத்திலே ஏராளமானவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திலே சேர்ந்தார்கள். அப்படி சேரும்போது, இந்த அந்நியரான ரோமர்களுக்கு யூதர்கள் யார்? அல்லது கிறிஸ்தவர்கள் யார் என்பது தெரியாமல் போனது. ரோமர்களுக்கு மார்க்க சம்பந்தமான காரியங்களின் அடையாளங்களை சரியாக கண்டுப்பிடிக்கமுடியாமல் போனது. ஆகவே யூதர்களுக்கு விசேஷமான ஒரு அடையாளம் ஓய்வுநாள் ஆசரிப்பாக இருந்தது.

சுற்றிலும் இருந்த எல்லா நாடுகளிலும், மித்ரா மார்க்கம் என்று ஒன்று இருந்தது. யாவரும் அந்த மித்ரா மார்க்கத்தை அனுசரித்தவர்களாக இருந்தார்கள். அந்த மார்க்கமானது சூரியனை தெய்வமாக கொண்ட மார்க்கமாக இருந்தது. அவர்கள் அந்த சூரியனை வணங்கி அதற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட ஞாயிறு கிழமையை அவர்கள் யாவரும் கொண்டாடிவந்தபோது, இந்த யூதர்கள் மாத்திரம் சனிகிழமையை ஓய்வுநாளாக கொண்டாடிவந்தார்கள்.

இப்படியிருக்க, இந்த யூதர்களை ஒழித்துகட்ட (அதாவது யார் கிறிஸ்தவர்கள் அல்லது யார் யூதர்கள் என்று பிரிப்பதற்கு) சனிக்கிழமையை யார் கொண்டாடுகிறார்களோ, அவர்களை பிடித்து கொன்றுவிடவேண்டும் என்று ரோம அரசாங்கம் கட்டளையிட்டது.

இப்படியிருக்க இந்த யூதர்களை அழிக்க, அந்த ரோமர்கள் பிரயாசப்பட்டபோது, கிறிஸ்தவர்களையும் சேர்த்து அழித்தார்கள். ஏனென்றால் கிறிஸ்தவர்களும் அந்த சனிகிழமையைதான் ஓய்வு நாளாக கைகொண்டார்கள். ஆகவே நாட்கள் கடந்துபோகையில் கிறிஸ்தவர்கள் மத்தியிலே யூதர்களின் மேலே ஒரு வெறுப்பு மாத்திரம் அல்ல, அந்த யூதர்களுக்கு அடையாளமாக இருந்த, ஏழாம் நாள் (சனிக்கிழமை) ஆசரிப்பின் மேலேயும் ஒரு வெறுப்பு வந்தது.

ஆகவே, எப்படியாவாது இவர்கள் ரோமர்களிடத்திலிருந்து அநாவசியமாக அடிக்கப்படுவதோ, தண்டனை பெறுவதோ, அதிலிருந்து தப்பவேண்டும் என்று சிந்தனை செய்து கொண்டிருந்தார்கள்.



அப்படி சிந்தனை செய்து கொண்டிருந்த நேரத்திலே, ட்ராஜன் என்ற ஒரு அரசன் எழும்பினான். அந்த அரசன் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக மாறினான். அவன் தன்னுடைய உருவச் சிலையை எல்லா பொது இடங்களிலேயும் வைத்தான். அந்த உருவச்சிலையை வைத்து அதை வணங்கவேண்டும் என்று நினைத்தான். ரோம சக்கரவர்த்திகள் தங்களை தாங்கள் சூரிய பகவானுடைய பிரதிநிதிகள் என்று நினைத்தார்கள்.

இன்றைக்கும் அப்படி நினைக்கின்ற ஒரே நாடு ஜப்பான்தான். ஜப்பானுடைய அரசர்கள், சூரிய பகவானுடைய பிரதிநிதிகள் என்று இன்றைக்கும் நினைக்கிறார்கள்.

அப்படியேதான் இந்த ரோமராயர்களும் நினைத்தார்கள். அப்படி நினைத்ததாலே, தங்களை கடவுளுடைய ஸ்தானத்திற்கு உயர்த்தி எல்லா ஜனங்களும் தங்களை வணங்கவேண்டும் என்று சொல்லி, பொது இடங்களிலே தங்களுடைய சிலைகளை வைத்து அதை வணங்க சொன்னார்கள்.

ஆனால் கிறிஸ்தவர்கள் அந்த சிலைகளை வணங்க மாட்டோம் என்று சொன்னதுமட்டுமல்ல, இந்த கிறிஸ்தவர்கள் “இயேசு எங்கள் ராஜா” என்று அடிக்கடி சொல்லிக் கொண்டுமிருந்தார்கள். அந்த வார்த்தைகள் இந்த ட்ராஜன் என்ற ராஜாவுக்கு பிடிக்காமல் “நாங்கள் ராஜாவாக இருக்கும்போது, ஏன் இயேசுவை ராஜா என்று சொல்லு கிறார்கள்?” என்று கடிந்து கொண்டாலும் அந்த கிறிஸ்தவர்கள் விடுவதாக இல்லை.

அதனால் ரோமராயர்களுக்கு இவர்கள் மீது மிகவும் கோபம் வந்தது. ஆகவே அந்த இரண்டாவது நூற்றாண்டிலே பயங்கரமான உபத்திரவக் காலம் கிறிஸ்தவர்களுக்கு வந்தது. ஏறகுறைய ஐந்து லட்சகிறிஸ்தவர்களை இந்த ரோமராயர்கள் கொன்றுபோட்டார்கள். அன்று இது ஒரு பெரிய அழிவாக இருந்தது. மீதி பேர் அங்கு மலைகளுக்கும் குகைகளுக்கும் தப்பி ஓடினார்கள்.

இப்படிப்பட்ட ஒரு உபத்திரவக்காலம் வரும், அந்த நேரத்திலே நீ உண்மையாயிரு, உத்தமமுமாயிரு, உனக்கு ஜீவ கிரீடத்தைக் கொடுப்பேன் என்று ஆண்டவர் வெளியாகம புத்தகத்தில் தம்முடைய சபைகளுக்கு எச்சரிப்புக் கொடுத்திருந்தார்.

ஆண்டவர் இந்த உபத்திரவத்தைப் பற்றி சொன்னது மாத்திரம் அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய காலத்திற்கு பிற்பாடும் சொல்வதை கவனியுங்கள்.

**"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்." -அப்போஸ்தலர் 20:26,27.**

தேவனுடைய ஆலோசனையிலே எதையும் மறைத்து வைக்க கூடாது. மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சரி, ஆண்ட வருடைய வசனத்தை, வசனமாக சொல்லவேண்டியது நம்முடைய பொறுப்பு.

**"ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள். " -அப்போஸ்தலர் 20:28-31.**

இங்கு சபைகளிலே, ஒரு பெரிய விழுதல் இருக்கும். சபை போதனைகளிருந்து, அநேக மக்கள் விழுந்துபோவார்கள் என்று தீர்க்க தரிசனமாக பவுல் சொல்லுகிறார். அவர்களை பற்றி கொடிதான ஓநாய்கள் என்று சொல்லுகிறார். அவர்கள் மத்தியிலே எழும்புவார்கள் என்றும் சொல்லுகிறார்.

ஆகவே அந்த கிறிஸ்தவ மார்க்கம் பரவினபோது, அங்கே "நாஸ்டிக்ஸ்" என்று சொல்லப்பட்ட ஒரு மதக்கூட்டம் இருந்தது. அவர்கள் ஒரு விசேஷமான கொள்கையுடையவர்கள். அவர்கள் எப்படியோ கிறிஸ்தவ மார்க்கத்திலே சேர்ந்துக்கொண்டார்கள். அந்த கிறிஸ்தவ மார்க்கம் ஆப்பிரிக்காவிலே பறவினபோது, அங்கேயிருந்த கிரேக்க படிப்பாளிகள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். அப்படி மாறின பெரியவர்களிலே, அகஸ்டின் என்று சொல்லப்பட்டவர் ஒருவர் இருந்தார்.

இவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வந்தபோது, தத்துவ ஞானிகளான கிரேக்கர்கள், தங்களுடைய தத்துவஞானத்தை அதிலே கொண்டுவந்தார்கள். இந்த "நாஸ்டிக்ஸ்" என்று சொல்லப் பட்டவர்கள் சூரியனை வணங்கின மக்கள். அவர்களும் இந்த கிறிஸ்தவ மார்க்கத்திலே சேர்ந்தார்கள்.

இப்படி பலபேர் இந்த கிறிஸ்தவ மார்க்கத்திலே சேர்ந்த போது, அநேகர் தங்களுடைய மார்க்கத்தினுடைய கொள்கைகளை கிறிஸ்தவ மார்க்கத்தினுள்ளே கொண்டுவந்தார்கள்.



அந்த சமயத்திலே கொனசந்திராயன் என்ற ஒரு ராயன் எழும்பினான். அவன் ஆச்சரியமான விதத்திலே கிறிஸ்தவனாக மாறிவிட்டான். அந்த ராஜியம் முழுவதும் பாபிலோனிய மார்க்கத்தை சார்ந்தவர்களாக இருந்தார்கள். அந்த பாபிலோனிய ராஜியத்திலிருந்துதான் இந்து மார்க்கம் வந்தது. இன்றைக்கு ஆராய்ச்சியாளர்கள் இதை ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

அந்த காலத்திலே இவர்கள் யாவரும் சூரியனை முக்கியமான தெய்வம் என்று வணங்கிவந்தார்கள். அந்த நாட்டிலே குடிமக்கள் யாவரும் பாபிலோனிய மார்க்கத்தை சார்ந்தவர்கள், ஆனால் இந்த கொனசந்திராயன் மலைகளிலும் குகைகளிலும் ஒளிந்துகொண்டிருந்த கிறிஸ்தவர்களை அழைத்துவந்தான். அதே நேரத்திலே கொனசந்திராயன் என்று சொல்லப்பட்ட அந்த கான்ஸ்டன்டை ராஜா, தன்னுடைய குடிமக்களுக்கு ஒரு அறிவிப்புக்கொடுத்தான். யார் கிறிஸ்தவர்களாக மாறுகிறார்களோ அவர்களுக்கு அநேக சலுகைகள் அளிக்கப்படும் என்று அறிவித்தான்.

அந்த அறிவிப்பை கேட்டவுடனேயே ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் வந்துவிட்டார்கள். ஆகவே இந்த புதிய கிறிஸ்தவர்களை எப்படி திருத்துவது? எப்படி போதிப்பது? என்று அந்த குருமார்களுக்கு தெரியவில்லை. அவர்கள் ஏராளமான பேர்களாயிருந்தார்கள். கிறிஸ்தவர்களோ கொஞ்சம் பேர் மாத்திரம் இருந்தார்கள்.

அப்படி அந்த அந்நிய மார்க்கத்தார் தங்களுடைய மார்க்கத்தின் கொள்கைகளை அப்படியே இந்த கிறிஸ்தவ மார்க்கத்திற்கு கொண்டுவந்துவிட்டார்கள். அவர்களை தடை செய்வதற்கு யாரும் கிடையாது. அந்த மார்க்கத்திலே சிலை வணக்கமாயிருந்தது. இங்கேயும் சிலை வணக்கம் புகுந்தது. அப்போது அந்த பாதிரியார்கள் "வேறு வழியில்லை, வேறு சிலைகளை வைப்பதற்கு பதிலாக இயேசு கிறிஸ்துவை சிலையாக வையுங்கள்" என்று சென்னார்கள்.

அந்த பாபிலோனிய மார்க்கத்திலே பெண் தெய்வங்கள் (ஈஸ்வரி, பரமேஸ்வரி) இருந்தது. இங்கு கன்னிமேரியம்மாவை தெய்வத்தின் நிலமைக்கு உயர்த்திவிட்டார்கள். பாபிலோனிய மார்க்கத்திலே தேர் இழுப்பதுபோல, இங்கேயும் தேரிலே கன்னி மேரியம்மாவையோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சிலையையோ வைத்து இழுத்தார்கள்.

பாபிலோனிய மார்க்கத்திலே திருமணம் செய்யாமல் இருப்ப வர்கள்தான் குருக்களாக இருக்கமுடியும். அதேபோல இந்த கிறிஸ்தவ மார்க்கத்திலேயும் குருமார்கள் (சாமியார்கள்) கல்யாணம் செய்யகூடாது என்று சட்டம் கொண்டுவந்தார்கள். பாபிலோனிய மார்க்கத்திலே தேவ அடியார்கள் என்று ஒரு கூட்டம் இருந்தது. அவர்கள் கடவுளுக்கு பணிவிடை செய்பவர்களாக இருந்தார்கள், அவர்கள் பெண்களாக இருந்தார்கள். ஆனால் இங்கேயும் பணிவிடை செய்பவர்களாக "ஒசியார்களாக" நியமிக்கப்பட்டார்கள். பாபிலோனிய மார்க்கத்திலே உத்திராட்சை மாலையை போட்டு கொண்டு ஜெபம்செய்வார்கள், இங்கே ஜெபமாலை வந்தது. பாபிலோனிய மார்க்கத்திலே மந்திரங்கள் இருந்தது, இங்கே பரமண்டல மந்திரம், தேவமாதா மந்திரம் வந்தது.

ஆகவே அந்த அந்நிய மார்க்கத்தினுடைய அநேக காரியங்கள் இந்த கிறிஸ்தவ மார்க்கத்திலே வந்தது.

இந்த கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய சபைக்கு கத்தோலிக்க மார்க்கம் என்ற பெயர் வந்தது. ஆகவே இந்த மார்க்கத்திலே அநேகவிதமான சடங்காசாரங்கள் வந்தது.

ரோமன் கத்தோலிக்க மார்க்கம் ஆண்டவருக்கு விரோதமாக பாவம்செய்யவேண்டும் என்று அந்நிய காரிங்களை கொண்டுவரவில்லை. தற்காலிகமாக இப்படிப்பட்ட காரிங்களை செய்தார்கள். பிறகு ஒழுங்கான வழிகளுக்கு வந்துவிடுவோம் என்று நினைத்து செய்ததினாலே, அது நிறந்தறமாக மாறிபோகும் என்று தெரியாமல் போய்விட்டது அவர்களுக்கு.

இந்த அந்நியகாரியங்களுடைய சடங்காசாரங்களை குறித்து கத்தோலிக்க வேதாகமத்தில் எந்த இடத்திலும் இப்படி செய் என்று சொல்லப்படவில்லை. அப்படியிருக்க இந்த காரியங்கள் யாவும் எப்படி வந்தது என்று நாம் யோசித்து பார்க்கவேண்டும். சரித்திரத்தை படிக்கவேண்டும். ஏன் கத்தோலிக்க மார்க்கத்திலே அநேக பாபிலோனிய இந்து காரியங்கள் வந்தது என்று நாம் சற்று சிந்திக்கவேண்டும். அந்த கத்தோலிக்க மார்க்கத்திலே செய்யும் அநேக காரியங்கள் இந்து மதத்தோடு ஒத்துப்போகிறது. ஆனால் அவர்கள் வைத்திருக்கும் வேதாகமத்தோடு ஒத்து போவதில்லை.

இந்த இரண்டு மார்க்கத்தையும் கொனசந்திராயன் உண்டாக்கினான். அது ரோமன் கத்தோலிக்க மார்க்கமாக வளர்ந்து, 1260 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியது. அப்படி ஆட்சி செலுத்தும்போது



இந்த வேதபுத்தகத்தை ஒழித்துவிட்டு, அங்கே வேடிகன் அரண்மனையிலே பெரிய வேதாகமத்தை ஒரு மேஜையிலே வைத்து, பொன்சங்கிலியினாலே கட்டிவைத்துவிட்டார்கள். ஏன் என்றால் வேதத்தை யாரும் படிக்கக்கூடாது.

ஏன் வேதத்தை யாரும் படிக்ககூடாது?

இவர்கள் இந்த சிலை வணக்கம் என்ற காரியங்களை கொண்டுவந்தபோது, அங்கிருந்த உண்மையான கிறிஸ்தவர்கள் எதிர்த்தார்கள். இந்த வேதத்தை படிக்கும்போதுதானே அவர்கள் எதிர்க்கிறார்கள். ஆகவே வேதத்தையே படிக்கக்கூடாது என்று அப்படி செய்தார்கள். தேவத்தை படிப்பது மரணத்திற்கு ஏதுவான பாவம் என்று சொன்னார்கள். ஆகவே அந்த பாப்பு அரசர்கள், வேதத்தை யாவும் திரட்டி, பத்து முறை கொளுத்திவிட்டார்கள். அப்படி வேதம் யாராவது கையிலிருந்தால், மரணதண்டனை வழங்கப்படும் என்று சட்டம் போட்டார்கள்.

நாட்கள் கடந்து போகையில், வேதமே இல்லாமல் போனபோது. அடுத்த சந்ததி வந்து, இதுதான் கிறிஸ்தவ மார்க்கம் என்று சொல்லி அந்த பாரம்பரியங்களை அப்படியே கைகொண்டு வந்துவிட்டார்கள்.

அப்பொழுது லுத்தர் சாஸ்திரியார், அஸ் ஜெரோம், விக்லி என்று சொல்லப்பட்டவர்கள் எழும்பி வேதத்தை வாசித்து, உண்மைகளை புரிந்து கொண்டு, முழுமையான சத்தியத்திற்குள் வளர்ந்தார்கள்.



Martin Luther (1483-1546)

**குறிப்பு:**

இயேசு கிறிஸ்து பிறந்தது குளிர்காலமா? அல்லது வெயில் காலமா?

**"குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்பு ண்டாக்கி, நின்று, குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடனே கூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான்."**
**- அப்போஸ்தலர் 20:26,27.**

இங்கு ஆண்டவர் இறந்தது குளிர் காலமாயிருக்கிறது. அவர் இந்த உலகத்திலே வாழ்ந்தது முப்பத்து மூன்றரை வருஷம். ஆகவே முப்பத்து மூனாவது பிறந்த நாள் கழிந்து, ஆறு மாதம் பிறகு அவர் இறந்தார். அவர் இறந்தது குளிர்காலம் என்று வேதம் சொல்கிறது. அந்த குளிர்காலம் என்றால் பொதுவாக நவம்பர், டிசம்பர், ஜனவரி என்ற மாதங்களிலேதான் குளிர்காலம் வரும். அவர் நவம்பர் மாதத்தில் மரித்திருந்தால் ஆறு மாதத்திற்கு முன்பு மே மாதத்தில் பிறந்திருக்கவேண்டும். அவர் டிசம்பர் மாதத்தில் மரித்திருந்தால் ஆறு மாதத்திற்கு முன்பு ஜூன் மாதத்தில் பிறந்திருக்கவேண்டும். அவர் ஜனவரி மாதத்தில் மரித்திருந்தால் ஆறு (மாதத்திற்கு முன்பு) ஜூலை மாதத்தில் பிறந்திருக்க வேண்டும். ஆதிகாலத்திலே கிறிஸ்மஸ் ஏப்ரல் மாதம் கொண்டாடப்பட்டது என்று சரித்திரம் சொல்லுகிறது. ஆகவே அவர் இறந்தது குளிர்காலம் பிறந்தது கோடைக்காலம்.

ஆனால் இன்று, இயேசுகிறிஸ்து பிறந்த நாளை தலைகீழாக கொண்டாடுகிறார்கள். அவர் இறந்தநாளில் கொண்டாடுகிறார்கள். ஏன் அவர் இறந்த நாளில் அவர் பிறந்த நாள் கொண்டாடப் பட்டது?

பாபிலோனிய எஸ்தோர் தேவதையின் பண்டிகையை ஈஷ்டர் பண்டிகையாக கத்தோலிக்கர்கள், வெயில் காலத்திலே கொண்டாடி வந்தார்கள். டிசம்பர் மாதம் 25–ந் தேதி சூரியனுடைய பிறந்தநாள் என்று சொல்லி, அந்த பாபிலோனிய வழக்கத்தின்படி கொண்டாடி னார்கள். அதை அப்படியே இயேசு பிறந்த நாள் என்று மாற்றி அந்த டிசம்பர் மாதம் 25–ந் தேதியிலே கொண்டாட ஆரம்பித் தார்கள்.

ஆகவே சூரியபகவானுடைய நாள் ஞாயிற்று கிழமையாக இருக்கிறது. புதன்கிழமை என்பது, புதன் கிரகத்தினுடைய பெயரை வைத்தார்கள். வெள்ளிக்கிழமை என்பது, வெள்ளி கிரகத்தினுடைய பெயரை வைத்தார்கள். சனிக்கிழமை என்பது, சனி கிரகத்தினுடைய பெயரை வைத்தார்கள். ஆனால் ஞாயிறு கிழமையை சூரியனுக்கு அபிஷேகித்து, அதை வணங்கி வந்தார்கள். அந்த சூரியவணக்கத்தின் நாளை கொண்டுவந்து



இங்கே கிறிஸ்தவ மார்க்கத்திலே கொண்டு வந்து, இதுதான் ஓய்வுநாள் என்று வைத்துகொண்டார்கள். இதை எதிர்த்த சிறு கூட்டமாகிய உண்மை கிறிஸ்தவர்களை கொன்றுபோட்டார்கள்.

கத்தோலிக்க திருச்சபையிலிருந்த தைரிமாமுனிவர் (வீரமாமுனிவர்) தன்னுடைய புத்தகத்தில் "அந்த நாளில் கத்தோலிக்க சபையை எதிர்த்தவர்களை (பத்து கோடி பேரை) நாங்கள் கொன்றோம்" என்று எழுதிவைத்திருக்கிறார். அன்று அஞ்ஞானிகள் ஐந்து லட்சபேரைதான் கொன்றார்கள். பிறகு கத்தோலிக்கர்கள் பத்து கோடி பேரை கொன்றார்கள்.

ஆகவே லூத்தர் சாஸ்திரியார் காலத்திலே விக்லி 1312 – ஆம் ஆண்டிலே, முதன்முதலாக வேதத்தை எழுதினதாலே, அவரைச் சிறையில் அடைத்தார்கள். அவர் அங்கிருந்தாலும் எப்படியோ அந்த வேதத்தை எழுதிமுடித்துவிட்டார்.

பிறகு அஸ் ஜெரோம் என்பவர் எழுதினார். பிறகு லூத்தர் எழுதினார். தப்பிதமான காரியங்கள் கத்தோலிக்க சபையிலே இருக்கிறது, அவைகளை விட்டுவிடுங்கள் என்று, தனி ஒரு மனிதனாக லூத்தர் புரட்சி செய்தார். அவர் மூலமாக வந்ததுதான் இந்த புராட்டன்ஸ்டன்ட் மார்க்கம்.

ஆகவே இந்த ஞாயிறு கிழமையின் ஆசரிப்பை, சாத்தான் சூரிய பகவானுடைய நாளை கிறிஸ்தவ மார்க்கத்திலே கொண்டுவந்து, இன்றைக்கு கிறிஸ்தவர்கள் யாவரும் அதை அனுசரிக்கும்படியாக செய்துவிட்டான்.

வேத வசனத்தை விட்டு விலகி, மந்தைக்குள் கொடிதான ஓனாய்கள் வந்து, தேவனுடைய பிள்ளைகளை பட்சிக்கிற காலம்வரும் என்று பவுல் சொன்னார். அதே போல உங்களுக்குள் அநேகர் எழும்பி மாறுபாடானவைகளை போதிப்பார்கள் என்று பவுல் சொன்னார். அது எப்படி திட்டவட்டமானவைகளாக இருக்கிறது.

ஒருவர் திருநல்வேலிக்கு போகும் பஸ்ஸை எடுக்காமல், சங்கரன்கோவிலுக்கு போகும் பஸ்ஸை எடுத்து, திருநல்வேலிக்கு ஒரு டிக்கட் கொடு என்று பத்து கிலோமீட்டர் வந்தபிறகு கேட்டார்.

இது எப்படியிருக்கிறது என்றால், பரலோகத்திற்கு போகவேண்டும் என்று ஏதோ ஒரு சபை கொள்கைகளை கடை பிடித்தால் எப்படி போவது? எது உண்மையான சபை? எது உண்மையாக போதிக்கிறது? என்று நமக்குள் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கத்தோலிக்க குருமார்கள் ஞாயிறு ஆசரிப்பை தாங்களாகவே கொண்டுவந்தோம் என்று அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். இதுதான் கத்தோலிக்கமுறை , இங்கு இப்படிதான் நடக்கும் என்று சொல்லுகிறார்கள்.

கத்தோலிக்க திருசபை கடவுளுடைய சட்டத்தை மாற்றுவதற்கு எங்களுக்கு அதிகாரம் உண்டு என்று வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள்.

**"அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கேற்ற வைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்." - மத்தேயு 16.22,23**

கடவுளுடைய கற்பனைகளையும் எண்ணங்களையும் நாம் கைக்கொள்ளாமலிருப்போமானால், இதோ வசனம் சொல்லுவது போல எனக்கு பின்னாக போ சாத்தானே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

திருசபையானது ஆண்டவருக்கு கீழ்ப்படியவேண்டும் என்று தான் சொல்லுகிறது. ஆண்டவர் சொல்லாததை நாமே செய்துக்கொள்ளலாம் என்று திருச்சபை சொல்லவில்லை. ஆண்டவருடைய சட்டத்திற்கும் வசனத்திற்கும், திருசபைகள் தங்களை மேலாக்க முடியுமா? அப்படி மேலாக்கினால் அவைகள் ஆண்டவரிடத்திலிருந்து வந்ததா?

கத்தோலிக்கர்கள் தங்களுக்கு அதிகாரம் உண்டு, அதனால் நாங்கள் எதையும் மாற்றலாம் என்று வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள். ஆனால் பிராட்டஸ்டன்ட் மார்க்கத்தார்: இல்லை! அவைகளை நீங்கள் மாற்றவில்லை, அவைகள் வேதத்தில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

ஆண்டவருடைய வசனங்களை கைக்கொள்ளாதபடி என்ன செய்யவேண்டுமோ, அவை யாவற்றையும் சாத்தான் கொண்டு வைத்துவிட்டான். விசேஷமாக இந்த சனி கிழமையை ஆசரிக்க கூடாதபடி எல்லாவிதமான தடங்களையும் இந்த உலகத்தில் வைத்துவிட்டான்.

நாம் வேறு எதையாகிலும் செய்யாமலிருக்கலாம், ஆனால் ஓய்வுநாளை மட்டும் நாம் கைக்கொள்ளகூடாது என்பது சாத்தனுடைய மாபெரும் திட்டம். ஏனென்றால் அந்த ஓய்வுநாள் இயேசுகிறிஸ்துவை அண்டசராசரத்தின் தேவன் என்று சொல்லுகிறது.



அந்த ஓய்வுநாள் இயேசு கிறிஸ்துவை இரட்சகர் என்று சொல்லுகிறது. யூதர்களும், ரோமர்களும், ஏரோதும் சேர்ந்து ஆண்டவரைக் கொன்றார்கள். அதேப் போல இன்றைக்கு ஒரு கூட்டாட்சி கர்த்தருக்கு விரோதமாக செயல்படுகிறது.

ஞாயிறு கிழமை இந்து மார்க்கம் சூரியபகவானுடைய நாள் என்று சொல்லுகிறது. கத்தோலிக்கர்கள் அது கடவுளுடைய நாள் என்று சொல்லுகிறார்கள். அவர்களோடுகூட பிராட்டஸ்டன்ட் மார்க்கத்தாரும் வணங்குகிறார்கள். நாம் யாவரும் நியாயத்தீர்ப்பிலே நிற்கபோகிறோம் என்று நாம் அறியவேண்டும்.

**"ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்." - யோவான். 12:47,48.**

இயேசுகிறிஸ்து நியாயம் தீர்க்கமாட்டார். அவருடைய வசனங்களையும் கற்பனைகளையும் வைத்துவிடுவார். அவைகள் தான் ஒவ்வொருவரையும் நியாந்தீர்க்கும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்று நமக்காக வக்கீலாக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அவர் என்றைக்கும் அப்படி பரிந்துபேசி கொண்டிருக்கமாட்டார், சீக்கிரமாக நியாயாதிபதியாக வரபோகிறார். இன்றைக்கு வக்கீலிடத்திலே நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம், செய்யலாம். ஆனால் அவர் நியாயாதிபதியாக அவர் உட்காரும்போது அவர் போட்ட சட்டம் மட்டுமே நியாயந் தீர்க்கும்.

**"காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்."**
**- பிரசங்கி 12:13,14.**

தேவன் நமக்கு கொடுக்கும் தூது என்ன? நீ தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்.

**"பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக் கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப் படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்களென்று கூறினான்." - வெளி. 14:6,7.**

இன்றைக்கு வேதவசனங்கள் சொல்லாத அநேக காரியங்களை நாம் செய்துக்கொண்டிருக்கிறோம்.

ஆண்டவர் மிகவும் ஆவலோடு நம் ஒவ்வொருவரையும் நோக்கி அழைக்கிறார். உண்மையான சத்தியத்தை ஏற்றுக்கொள்ள அழைக்கிறார். நாமோ நீர் சொல்லும் வார்த்தைகள் எனக்கு பாரமாக இருக்கிறது, என் வழியிலேயே என்னை விட்டுவிடும் என்று சொல்லுகிறோம்.

ஆழிவுக் காலம் அவருக்கு முன்பாக நிற்கிறது. இக்கட்டுக் காலம் அவருக்கு முன்பாக நிற்கிறது. உலகத்தில் சமாதானம் இல்லாமற்போகும் காலம் அவருக்கு முன்பாக நிற்கிறது. வேதனை நிறைந்தக் காலம் அவருக்கு முன்பாக நிற்கிறது. இவைகள் யாவும் அதன் வேலைகளை செய்ய தயாராக இருக்கிறது. அதை ஆண்டவர் அறிவார். ஆண்டவரோ சீக்கிரமாக நீ மனந்திரும்பு! மனந்திரும்பு! மனந்திரும்பு! என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்.

காலம் பிந்திவிட்டால் நீ என்ன செய்வாய்? என்னால் உன்னை இரட்சிக்கமுடியாதே, என் வசனங்களே உன்னை நீயாந்தீர்க்கபோகிறது என்று சொல்லுகிறார்.

**"எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்." - 2 தெச. 2:3,4.**

இந்த இரகசியத்தை நாம் புரிந்து கொண்டு இரட்சிக்கப்பட வழியை தெரிந்துக்கொள்ளவேண்டும். ஆண்டவருடைய பிள்ளை களாகிய நாம், அவருக்கே விரோதமாக இருக்கலாமா?

சிலர் சொல்லுகிறார்கள்…

**"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகைநாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக." - கொலோசேயர் 2:14,15,16.**

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறதுபோல போஜனபலி பானபலி பண்டிகை நாட்கள் யாவும் பத்து கற்பனைகளில் இடம் பெறவில்லை.



நம் வேதத்திலே பதிமூன்று வகையான கட்டளைகள் இருக்கிறது.

**நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: சபைகூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன: –** லேவியராகமம் 23.2

பஸ்கா பண்டிகை, கூடாரப் பண்டிகை, என்று அநேக பண்டிளைகளைக் குறித்து இந்த அதிகாரம் முழுவதும் பேசப் படுகிறது. இந்த பண்டிகைகளிலே எட்டு ஓய்வு நாட்களை பற்றி ஆண்டவர் பேசுகிறார். உதாரணமாக…

**முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிடவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல் என்றார். –** லேவியராகமம் 23: 7,8.

கத்தோலிக்க திருமறையிலே "ஓய்வுநாள் ஆண்டின் திரு நாட்கள்" திருநாட்கள் என்றால் பண்டிகைநாட்கள். பண்டிகை நாட்களின் திருநாட்கள் என்றே அதற்கு தலைப்பு கொடுத் திருக்கிறார்கள்.

ஆகவே வாரத்தின் ஓய்வுநாளைப் பற்றி இங்கு பேசப்படவில்லை. லேவியராகமத்திலே போஜனபலிகளையும், பண்டிகைகளை குறித்தும் பேசும்போது எட்டு ஓய்வுநாட்கள் வருகிறது.

**அந்த நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை. –** லேவி. 23:21.

**நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால் உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாளாயிருப்பதாக. –** லேவி. 23:24.

**அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள். –** லேவி. 23:27.

**முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. -** லேவி. 23: 35.

**ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்; எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்; எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்; அது ஆசரிக்கப்படும் நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். –** லேவி. 23:36.

**நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்கும் ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்கக் கடவீர்கள்; முதலாம் நாளிலும் ஓய்வு: எட்டாம் நாளிலும் ஓய்வு. – லேவி. 23:39.**
இந்த ஓய்வுநாட்கள் யாவும் பண்டிகை ஓய்வுநாட்கள். ஆகவே தான் கொலோசேயரிலே சொல்லப்பட்டதுபோல, போஜனத்தையாவது அல்லது மற்றவைகளை குறித்து குற்றப்படுத்தாதிருப்பானாக என்ற அந்த வாக்கியம், அந்த பண்டிகை நாட்களிலே வருகிற, அந்த ஓய்வுநாட்களை பற்றி பேகிறதே தவிர, வாரத்திலே நாம் அனுசரிக்கிற ஓய்வு நாளை பற்றி பேசவில்லை.
"தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், கேள்விப்பட்ட சத்தியத்திற்காக ஆண்டவரை நாம் ஸ்தோத்தரிக்க வேண்டும். அவருக்கே கனமும் மகிமையும் உண்டாவதாக." –ஆமென்.

# இரட்சிப்படைவோம் !

**ச**த்தியம் நம் பக்கத்தில் இருக்கும்போதே நாம் அதை பற்றி பிடித்துக் கொள்ளவேண்டும். சத்தியம் கிடைக்கக் கூடாதக் காலம் வெகு சீக்கிரத்தில் வர இருக்கிறது. இன்னும் நிறைய நாட்கள் ஆகலாம் என்று தூங்கிக் கொண்டிருக்க இது நேரமல்ல. ஆண்டவர் தேவனுடைய பிள்ளைகளுக்கு இந்த உலகத்தின் கடைசி நாட்கள் நெருங்கிவிட்டது, அவர் வெகு சீக்கிரத்தில் வரபோகிறார் என்ற எச்சரிப்புகளை கொடுத்துக்கொண்டே இருக்கிறார். இந்த விதமான அதிக எச்சரிப்புகள் நாம் இரட்சிக் கப்படவேண்டும் என்பதற்காகதான். பணம் சேர்த்துவைக்க இது காலமல்ல, பணத்தை ஊழியத்திற்கும் ஏழைகளுக்கும் செலவிட்டு பரலோகத்திலே நம் பெயர் ஜீவ புத்தகத்திலே எழுதப்படவேண்டும்.

நிலங்கள், வீடு வாங்க இது காலம் அல்ல, அவைகள் யாவும் அழியபோகிறது, கர்த்தர் நமக்காய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்துகிறார் அதுவே நமக்கு நிலையான வீடாக இருக்கும். வீணாய் பேசிக் கொண்டிருக்க இது காலமல்ல, தீர்க்க தரிசனத்தையும் இயேசுவைப் பற்றின சாட்சியையும் மற்றவரிடம் பேசுவோமாக. ஒருவொருக்கொருவர் சமாதானமில்லாமல் சண்டைபோட்டுக் கொண்டிருக்க இது காலமல்ல, வலிய வம்பு வந்தாலும் இயேசுவை நம் நினைவில் வைத்து கொண்டு அமைதியாய் இருந்து அதற்காக அவரிடம் மன்றாடி ஜெபிப்பதே நம் கடமையாகும்.



ஏனென்றால் நம் வாயிலிருந்துப் புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் நாம் அவரிடம் கணக்குக் கொடுக்கவேண்டும். விசுவாசிகளிடத்திலே ஒருவருக்கொருவர் வாக்குவாதமோ அல்லது சமாதானம் இல்லாமலோ இருக்கவேண்டிய நேரம் இதுவல்ல, விசுவாசிகள் யாவரும் நம் சொந்தக்காரர்கள் போலி ராதபடியால் யாவரும் கர்த்தருக்குள் இருக்கிறபடியால் நாம் அனைவரும் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் இருக்கவேண்டும். ஏனென்றால் ஓடி போகும் காலம் வரும்போது நாம் நம் சொந்தக்காரர்களோடே ஓடி போகமுடியாது, நாம் விசுவாசிகளோடே குழுக்களாக ஓடிபோவோம் என்று எலன் ஒயிட் அம்மையார் எழுதியிருக்கிறார்கள்.

விசுவாசிகளுக்குள்ளிருக்கும் அன்பு மகா பெரியது. சகோதர பாசம் அங்கு கொழுந்து விட்டு எரியவேண்டும். இயேசுவுக்கு அநேக விசுவாசிகள் இருந்தார்கள். அவர் போன பிறகு அவர்கள் ஒருவருக்கொருவர் புத்திமதி சொல்லி கொண்டும் சமாதானத்தை அடைந்துகொண்டும் ஆண்டவரின் கற்பனைக்கினங்க நடந்து கொண்டும் இருந்தார்கள். நம்முடைய காலத்திற்கும் இதுவே மகா பெரிய தேவையாக இருக்கிறது.

ஆகவே இரட்சிக்கப்பட தினமும் நாம் தேவனை நினைத்து கொண்டேயிருக்கவேண்டும். அவர் எப்படி வாழ்ந்தாரோ அதன் அடிப்படையை நாம் கவனித்து நடக்கவேண்டும். கற்பனைகளுக்கு விரோதமாக நாம் சிந்தித்து செயல்பட்டு கொண்டிருக்க இது காலமல்ல, கற்பனைகளை ஒழுங்காய் கடைப்பிடிப்பதே நம் நோக்கமாயிருக்க வேண்டும்.

வேதம் சொல்லாததை நாம் செய்வது சரியல்ல, வேதம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்பதே நம் கடமையாகும். பரலோகத்திற்கு செல்ல நமக்கு ஆசையாயிருந்தால் அவருடைய கற்பனைக்கு கீழ்ப்படிவோமாக. காலம் சமீபித்துவிட்டது என்பதை நம் நினைவிலே வைத்துக் கொள்ளவேண்டும். அவர் சீக்கிரமாக வருகிறார் ! – ஆமென்.

\- **ANGE Almode**